[1974 மார்ச் 26

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. அதுபற்றி கோரிக்கை அனுப்பப்படுமானால், அரசாங்கம் அதுபற்றி ஆலோசிக்கும்.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, மத்திய சமையற் கூடத்திலிருந்து வான்கள் மூலமாக உணவு எடுத்துச் செல்லப் படும்போது, மிக உள்ளடக்கமான கிராமப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளுக்கு அந்த உணவை எடுத்துச்செல்ல முடியாத நிலை இருக் கிறது. பாதை வசதி சரியாக இல்லாததால் அப்படிப்பட்ட இடங்களுக்குக் கொடுத்துவந்த உணவை நிறுத்திவிட்டார்கள். ஆசிரியர்கள் மூலமாக முன்பு கொடுத்துவந்த முறையையே மீண்டும் கையாள அரசு ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதனை ஆராயலாம்.

சிவகங்கை அரண்மனை

* 592 **வினா—திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகங்கையில் உள்ள அரண்மனை பழுதடைந்திருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பழுது பார்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சில பகுதிகள் நல்ல நிலையிலும் சில பகுதிகள் சுமாரான நிலையிலும் மற்றும் சில பகுதிகள் பழுதடைந்தும் உள்ளன.

(இ) அரண்மனை தற்சமயம் சிவகங்கை சமஸ்தான நிர்வாகத்தில் இருப்பதாலும், அரசு எடுத்துக் கொண்டு இலட்சக் கணக்கில் செலவு செய்து பழுதுபார்க்கும் அளவிற்கு அழகு வாய்ந்ததும் அல்ல என்பதாலும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டு மன்னர்கள் கோட்டையையும் கோயிலையும் ஒன்றாக பாவித்தார்கள். அதன் அடிப்படையில் இன்றைக்கு தமிழ்

1974 மார்ச் 26]

நாட்டில் ஏராளமான கோயில்களும் கோட்டைகளும் பழுதடைந்திருக்கின்றன. குறிப்பாக, புகழ்பெற்ற இராஜேந்திர சோழன், கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில் மிகவும் பழுது அடைந்தும் சீர்கெட்டும் இருப்பதால், புகழ்பெற்ற அந்த மன்னன் இராஜேந்திரனுக்காவது மதிப்பு கொடுத்து கங்கைகொண்ட சோழபுரத்தை நம்முடைய சர்க்கார் ஏதாவது செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் நேரடித் தொடர்பில்லை. என்றாலும், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கோயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருப்பதன் காரணமாக அதைப்பற்றி எடுக்கவேண்டிய முழு நடவடிக்கையையும் மத்திய அரசுதான் எடுக்கவேண்டியிருக்கிறது. மாநில அரசின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று பல தடவை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவிக்கவில்லை.

திரு. கா. காளிமுத்து : அங்கே நினைவுச் சின்னம் வைப்பதற்கு செயற் குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிவகங்கைச் சீமை புகழின் காரணமாக மருது பாண்டியன் சிலை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட செயற் குறிப்பு இல்லை.

திரு. த. சோனையா : இந்த சிவகங்கை அரண்மனையில் தற்பொழுது அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அது வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அரண்மனையாக இருப்பதினால், அந்த அரண்மனை மருதுபாண்டியர் வாழ்ந்த இடமாக இருப்பதால், மருதுபாண்டியர்களுடைய வீரத்தை நாட்டிற்கு எடுத்துக்காட்ட அங்கே இரண்டு கோட்டைகள் நிமிர்ந்திருக்கின்றன. அவைகள் இப்பொழுது சுவர் விரிந்து இருக்கிறது. அவைகள் சாய்ந்து போகாத நிலைமைக்கு அந்தக் கோட்டைகளைச் சரிக்கட்டுவதற்குத் தமிழக அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த அரண்மனை சிவகங்கை சமஸ்தானத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. அரசு தலையிட இயலாது. அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அரண்மனை முழுவதையும்

அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டால் எந்த அளவுக்கு நினைவுச் சின்னம் வைக்கலாம் என்பதைப்பற்றி ஆராயலாம். அந்த அரண்மனையை நாமே எடுத்து நடத்துகிற அளவுக்கு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு அமைந்ததாக அது இல்லை.

மருதுபாண்டியர்கள் இருந்தார்கள் என்ற புகழ் உண்டு. அது அழகுவாய்ந்த இடம் என்று சொல்வதற்கும் இல்லை. தமிழகத்தில் எல்லா ஜமீன்தார்களின் வீடுகளைக்கூட அரண்மனை என்று தான் சொல்கிறார்கள். அங்கே இருப்பவர்கள் ராஜாக்கள் என்று தான் அழைக்கப்படுகிறார்கள். அப்படிப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஊருக்கு ஊர் ஒரு அரண்மனை இருக்கிறது. அதெல்லாம் கூட ஜமீன்தார்கள் வாழ்ந்த இடம் என்றுதான் அழைக்கிறார்கள்.

அது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக இருந்தால்தான் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் எடுத்து பராமரித்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது இன்னும் தனியார் சொத்தாகத்தான் இருந்து வருகிறது.

Tourism Development Corporation

* Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the amount of profit earned by the Tourism Development Corporation in the State during 1972; and

(b) the expenditure incurred by the Corporation during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆதாயம் எதும் கிட்டவில்லை.

(இ) 16,32,579 ரூபாய்.

திரு. என். கே. பழனிசாமி : 1973-74-ல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? லாபம் ஏற்பட்டிருக்கிறதா? அதிகப்படியான செலவு ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த வாரியம் 1971-ம் ஆண்டில் துவக்கப்பட்டு, அப்பொழுது 6 சுற்றுலா மாளிகைகளை எடுத்துக்கொண்டது. அவைகளை எடுத்துக்கொண்ட நிலையிலே அவைகளை மேலும் கவர்ச்சிகரமாக ஆக்குவதற்கு, புதுப்